பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

10 01 2025 — வெள்ளிக்கிழமை

12 40 — பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. வந்தே பாரத் ரயில்கள் நடுத்தர மற்றும் குறைந்த வருவாய் பிரிவினருக்கு தரமான சேவையை அளித்து வருவதாக ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.
2. மக்கள் நலனோடு சார்ந்த பொருளாதார முன்னேற்றத்தை உறுதி செய்ய வேண்டுமென்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.
3. மகா கும்பமேளா நிகழ்ச்சிகளை ஒலிபரப்புவதற்கான ஆகாஷவாணியின் கும்பவாணி அலைவரிசையை உத்திரபிரதேச மாநில முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத் இன்று தொடங்கி வைத்தார்.
4. தில்லி சட்டப்பேரவை தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்கியது.
5. இந்தியாவுக்கு எதிரான முதலாவது ஒரு நாள் மகளிர் கிரிக்கெட் போட்டியில் டாஸ் வென்ற அயர்லாந்து அணி முதலில் பேட் செய்து வருகிறது.

<u>*---- இனி விரிவான செய்திகள்---*</u>

**[]<<<>>>[]**

நடுத்தர மற்றும் குறைந்த வருவாய் பிரிவினருக்கு தரமான ரயில் சேவையை வந்தே பாரத் ரயில்கள் அளித்து வருவதாக அத்துறைக்கான அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

சென்னையில் ஒருங்கிணைந்த ரயில்ப்பெட்டி தொழிற்சாலையில் இன்று நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பின்போது இதனைத் தெரிவித்த அமைச்சர், நாட்டு மக்களுக்கு உலக தரத்திலான ரயில்சேவையை வழங்க வேண்டுமென்ற பிரதமர் திரு நரேந்திரமோடியின் தொலைநோக்குப் பார்வையை வந்தே பாரத் சேவை உறுதி செய்திருப்பதாகக் கூறினார்.

ரயில்வேயில் அம்ரித் பாரத் இயக்கத்தின் இரண்டாவது கட்டம் மக்களின் தேவையை முற்றிலுமாக பூர்த்தி செய்யும் என்று அவர் தெரிவித்தார்.

அம்ரித் பாரத் ரயில் பெட்டிகளில் பயணிகளின் வசதி மற்றும் பாதுகாப்புக்காக 12 முக்கிய மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

குறைந்த வருவாய் பிரிவினருக்கென்று 50 புதிய ரயில்கள் இரண்டு ஆண்டுகளில் கொண்டுவரப்பட உள்ளதாகவும் திரு அஸ்வினி வைஷ்ணவ் குறிப்பிட்டார்.

வந்தே பாரத் ரயில்களில் தற்போதுள்ள வசதிகளை மேம்படுத்துவதற்கான திட்டங்களையும் அமைச்சர் இன்று வெளியிட்டார்.

நவீன வசதிகளுடன்கூடிய கழிவறைகள், அவசரகால வசதிகள், தீ தடுப்பு அமைப்புகள், செல்போன் சேவையை பயன்படுத்துவதற்கான கூடுதல் வசதிகள் போன்றவை இதில் இடம்பெற்றுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நவீன முறையில் சர்வதேச தரத்தில் கட்டப்பட்டுள்ள பாம்பன் பாலத்தின் கட்டுமானப் பணிகள் நிறைவு பெற்றுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

செய்தியாளர்களின் ஒரு கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், ஜம்மு-கஷ்மீர் ஸ்ரீநகர் இடையே 97 சுரங்கப்பாதைகள் மற்றும் ஆறு கிலோமீட்டர் தூர பாலங்கள் அமைக்கப்பட்டுள்ளதால் அந்த வழித்தடத்தில் வந்தே பாரத் ரயிலை இயக்குவதற்கான சோதனை ஓட்டங்கள் நடைபெற்று வருவதாகவும்,

அதற்குப் பின்னர் அந்த வழித்தடத்தில் வந்தே பாரத் ரயில் இயக்கப்படும் என்றும் கூறினார்.

பத்தாயிரம் ரயில் எஞ்ஜின்களில் பாதுகாப்பு எச்சரிக்கைக்கான கவாச் தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நீண்ட தூரம் பயணம் செய்வதற்கான படுக்கை வசதி அமைப்புகளை மாற்றியமைப்பது குறித்து திட்டமிடப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

புதிய தேவைகளுக்கு ஏற்ப ரயில்வே துறையின் கட்டமைப்பை மேம்படுத்தவும், தரமான ரயில் சேவையை வழங்கவும் ரயில்வே அமைச்சகம் உறுதிபூண்டுள்ளதாக திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

பின்னர் திருவள்ளூர் மாவட்டம் புதுவாயல் கிராமத்தில் உற்பத்திக்கான இந்தியா திட்டத்தின் கீழ் ரயில் சக்கரம் தயாரிக்கும் தொழிற்சாலையை திரு அஸ்வினி வைஷ்ணவ் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திரு அஸ்வினி வைஷ்ணவ், ரயில் பெட்டிகளை இணைக்க தற்போது 80 ஆயிரம் உறுதியான ரயில் சக்கரங்கள் தேவைப்படுவதாகவும், இதனை பூர்த்தி செய்யும் வகையில் இந்த தொழிற்சாலை உற்பத்தியை தொடங்குவதற்கான பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருவதாகக் கூறினார்.

**[]<<<>>>[]**

மக்கள் நலனோடு சார்ந்த பொருளாதார முன்னேற்றத்தை உறுதி செய்ய வேண்டுமென்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.

புவனேஸ்வரில் நடைபெற்று வரும் வெளிநாடுவாழ் இந்தியர்கள் மாநாட்டில் இன்று உரையாற்றிய அவர், பெண்களின் மேம்பாட்டை உறுதி செய்ய பாலின சமத்துவத்தை கடைபிடிக்க வேண்டியது அவசியம் என்று கூறினார்.

இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை மற்றும் சர்வதேச விவகாரங்களில் பெண்கள் முக்கிய பங்காற்றுவதாகவும அவர் தெரிவித்தார்.

குடும்ப அமைப்பு தொடங்கி பெண்கள் மீது பாரபட்சம் காட்டப்படுவது முற்றிலுமாக தடுக்கப்பட வேண்டுமென்றும் அவர் வலியுறுத்தினார்.

பெண்களுக்கான கல்வி, சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து போன்றவை கிடைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

18-வது வெளிநாடு வாழ் இந்தியர்கள் மாநாட்டின் நிறைவு விழா இன்று பிற்பகல் நடைபெறுகிறது.

இதில் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கலந்து கொண்டு உரையாற்றவுள்ளார்.

**[]<<<>>>[]**

உத்தி.ரபிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் மகா கும்பமேளா நிகழ்ச்சிகளை வழங்குவதற்காக ஆகாஷவாணியின் சிறப்பு அலைவரிசை கும்பவாணியை அம்மாநில முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத் இன்று காலை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் காணொலி வாயிலாக பங்கேற்ற மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன், மகா கும்பமேளா சாதி மத இன வேறுபாடுகளைக் கடந்து தேச ஒற்றுமையின் அடையாளமாக திகழ்கிறது என்று கூறினார்.

கும்பமங்கல்தன் நிகழ்ச்சியையும் திரு யோகி ஆதித்யநாத் இன்று தொடங்கி வைத்தார்.

மகாகும்பமேளாவில் அன்றாடம் இடம்பெறும் நிகழ்ச்சிகளின் வர்ணனை, கும்பமேளா ஏற்பாடுகள் உள்ளிட்ட முக்கிய தகவல்களை நாளை முதல் இந்த அலைவரிசையில் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

காலை மணி 5-55 முதல் இரவு மணி 10-05 வரை தொடர்ச்சியாக நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகும்.

அடுத்த மாதம் 26-ஆம் தேதி வரை கும்பவாணி அலைவரிசையில் நிகழ்ச்சிகளை நேயர்கள் கேட்கலாம்.

103 புள்ளி ஐந்து மெகாஹெட்ஸ் பண்பலை வரிசையில் இடம்பெறும் கும்பவாணி நிகழ்ச்சிகளை நியூஸ் ஆன் ஏர் செயலி மூலமாகவும், ஓ டி டி தளங்களிலும் ஒலிபரப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சியில் பிரஸார்பாரதி தலைவர் டாக்டர் நவ்நீத்குமார் சேகல், தலைமை செயல் அதிபாரி திரு கௌரவ் நிவேதி, ஆகாஷவாயணியின் தலைமை இயக்குநர் டாக்டர் பிரக்யா பாலிவால் கௌர், தூர்தர்ஷன் தலைமை இயக்குநர் திரு கஞ்சன் பிரசாத் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**[]<<<>>>[]**

தில்லி சட்டப்பேரவை தேர்தலுக்கான அறிவிக்கை இன்று வெயியிடப்பட்டதை அடுத்து வேட்புமனு தாக்கல் தொடங்கியது.

வேட்புமனுக்களை தாக்கல் செய்ய இம்மாதம் 17-ஆம் தேதி கடைசி நாளாகும்.

மனுக்கள் மீதான பரிசீலனை 18-ஆம் தேதி நடைபெறும்.

வேட்புமனுவை திரும்பப் பெற இம்மாதம் 20-ஆம் தேதி கடைசி நாளாகும்.

வாக்குப்பதிவு அடுத்த மாதம் ஐந்தாம் தேதி தேதி நடைபெறவுள்ளது.

வாக்கு எண்ணிக்கை அடுத்த மாதம் எட்டாம் தேதி மேற்கொள்ளப்படுகிறது.

இதற்கிடையே, ஈரோடு கிழக்கு சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தல் மற்றும் உத்தரபிரதேச மாநிலம் மில்கிபூர் சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கலும் இன்று தொடங்கியது.

இந்த தொகுதிகளிலும் இம்மாதம் 17-ஆம் தேதி வரை வேட்புமனுக்களை தாக்கல் செய்யலாம்.

[]<<<>>>[]

தேசிய மாணவர் படையினருக்கான புதிய கருத்துக்கள் மற்றும் புதுமை கண்டுபிடிப்புகளுக்கான போட்டியை என் சி சி-யின் தலைமை இயக்குநர் லெப்டினென்ட் ஜெனரல் குர்பீர் பால்சிங் இன்று புதுதில்லியில் தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், தேசிய மாணவர் படையினரின் புதிய சிந்தனைகளை ஊக்குவிக்கவும், அவர்களின் கண்டுபிடிப்புகளுக்கு அங்கீகாரம் அளிக்கும் வகையிலும் இந்த போட்டிகள் நடத்தப்படுவதாகத் தெரிவித்தார்.

என் சி சி பாடத்திட்டத்தில் மாணவர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சி முகாம்கள் குறித்த தகவல்கள் சேர்க்கப்பட உள்ளதாகவும் அவர் கூறினார்.

நாடு முழுவதிலுமிருந்து 50 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு இந்த போட்டிகளில் பங்கேற்றுள்ளதாக லெப்டினென்ட் ஜெனரல் குர்பீர் பால்சிங் தெரிவித்தார்.

[]<<<>>>[]

தமிழகத்தில் செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரத்தை அடுத்த திருவிடந்தையில் சர்வதேச பலூன் திருவிழாவை மாநில அமைச்சர்கள் திரு தா மோ அன்பரசன், திரு ராஜேந்திரன் ஆகியோர் இன்று தொடங்கி வைத்தனர்.

சர்வதேச மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் பத்தாவது ஆண்டாக இந்த பலூன் திருவிழா நடத்தப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பை - சுரேகா )---- 43 செகண்ட்*

[]<<<>>>[]

சத்திஷ்கர் மாநிலம் பிஜப்பூர் மாவட்டத்தில் 13 மாவோயிஸ்டுகள் காவல்துறையினரிடம் சரணடைந்துள்ளனர்.

இந்த மாவோயிஸ்டுகள் குறித்து தகவல் தெரிவிப்பவர்களுக்கு 13 லட்சம் ரூபாய் பரிசுத் தொகை அறிவிக்கப்பட்டிருந்தது.

இது குறித்து செய்தியாளர்களிடம் தெரிவித்த பிஜப்பூர் மாவட்டத்தின் காவல்துறை கண்காணிப்பாளர், சரணடைந்த அனைவருக்கும் தலா 25 ஆயிரம் ரூபாய் மறுவாழ்வுக்கென அம்மாநில அரசு வழங்கும் என்றும் தெரிவித்தார்.

[]<<<>>>[]

இந்தியாவுக்கு எதிரான முதலாவது ஒரு நாள் மகளிர் கிரிக்கெட் போட்டியில் முதலில் பேட் செய்து வரும் அயர்லாந்து அணி சற்று முன் வரை 22 புள்ளி இரண்டு ஓவரில் நான்கு விக்கெட் இழப்புக்கு 93 ரன் எடுத்துள்ளது.

ராஜ்கோட்டில் நடைபெற்று வரும் இப்போட்டியில் டாஸ் வென்ற அயர்லாந்து அணி முதலில் பேட் செய்ய தீர்மானித்தது.

இரு அணிகளுக்கும் இடையே மூன்று ஒருநாள் போட்டிகள் நடைபெறுகின்றன.

[]<<<>>>[]

ஹாக்கி இந்தியா லீக் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் தமிழக அணி – பெங்கால் அணியை எதிர்கொள்கிறது.

ஒடிஸாவில் இப்போட்டி இரவு மணி 8-15-க்கு தொடங்குகிறது.

[]<<<>>>[]

ஐ எஸ் எல் கால்பந்துப் போட்டியின் இன்றைய ஆட்டத்தில் ஒருங்கிணைந்த வடகிழக்கு அணி - பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

குவாஹாத்தியில் இப்போட்டி இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

போபால் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சித்தார்த் ராவத் அரை இறுதிக்கு முன்னேறியுள்ளார்.

***End of News***

10 01 2025 12 40 பவானிசாகர்- அணைதிறப்பு

**co(**ஈரோடு மாவட்டம் பவானிசாகர் அணையிலிருந்து இரண்டாம்போக புன்செய் பாசனத்திற்கு இன்று தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

மே ஒன்றாம் தேதி வரை திறந்துவிடப்படும் இந்த தண்ணீரின் மூலம் கீழ்பவானி வாய்க்கால், இரட்டைப்படை மதகுகள் மற்றும் சென்ன சமுத்திரம் பகிர்மான வாய்க்கால் பகுதிகளைச் சேர்ந்த சுமார் ஒரு லட்சத்து மூவாயிரத்து 500 ஏக்கர் நிலம் பாசன வசதிபெறும் .

எல்கே / ச மூர்த்தி / 6